# ரானே பிரேக் லைனிங் சாதனை

Rane

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட பிரபல ரானே குழுமத்தின் ஓர் அங்கமான ரானே பிரேக்லைனிங் லிமிடெட் நிறுவனம். ரானே குழுமம் ஆட்டோ காம்பொனன்ட் தயாரிப்பில் உள்ள மிகப்பெரும் குழுமமாகும். இந்த ரானே பிரேக் லைனிங் நிறுவனம் இந்தியாவில் உள்ள மிகப்பெரிய நிலையில் உள்ள "பெஸ்ட் ஓர்க் பிளேஸஸ்" என்கிற நிலைப்பாட்டை தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக பெற்றுள்ளன. கிரேட் பிளேஸ் ஓர்க் இன்ஸ்டிடியூட்டினரால் டாப் 3 என்கிற வரிசையில் உள்ள ஆட்டோகாம்பொனன்ட் இண்டஸ்டிரி என வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

ரானே பிரேக் லைனிங் தொழிலகத்தில் ஒவ்வொரு தொழிலாளரும் மிகுந்த ஈடுபாட்டுடன் தங்கள் பணியையாற்றுகின்றனர். இவ்வாறு தொழிலாளர்கள் பணியாற்றுவதற்கு அவர்கள் ஆர்வமுடன் செயல்பட இனிமையான சூழ்நிலையை நாங்கள் அளிக்கிறோம். அவர்களின் பங்களிப்பை மதிப்புடன் ஏற்கிறோம் என ரானே பிரேக் லைனிங் லிமிடெட்டின் தலைவர் திரு.பி.எஸ்.ராவ் அவர்கள் தெரிவிக்கிறார்.

தொழிலாளர்களின் நம்பிக்கை, பெருமை, பணியாற்றிட தகுந்த சூழ்நிலை, வெளிப்படையாக பேச வசதிகள், பயிற்சி முறைகள், தலைமை ஏற்க வாய்ப்புகள் ஆகியவைகள் அனைத்தும் ரானே பிரேக் லைனிங்கின் முக்கிய தூண்களாகும். பணியாளர்களுக்கு வழங்கிடும் பணிச் சூழ்நிலை அவர்களால் பெரிதும் வரவேற்கப்படுகின்றன. நன்றியின் வெளிப்பாட்டுடன் பெரிதும் வரவேற்கப்புரிதலுடன் ஆர்வமுடன் பணியாளர்கள் புன்முறுவலுடன் ஒவ்வொரு பிரிவிலும் ஈடுபட்டுவருகின்றனர். இவ்வகையில் உள்ளது "சுபோதயம்" என்பதாகும். இதன்படி ஒவ்வொரு இனிய காலை நேரத்திலும் அனைவரும் ஒன்று கூடி தங்களின் எண்ணங்களையும் முயற்சிகளையும் ஆர்வத்தையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வர். மற்றவர்கள் அளிக்கும் விபரங்களையும் பெற நிறைந்த வாய்ப்புகள் உள்ளன.

எமது ரானே குழுமத்தில் நாங்கள் நவீன தொழில்முனைப்புகளையும் தொழில் ஆக்கங்களையும் கடைபிடித்து தொழில்புரிவதை வலிமைப்படுத்தி தொழில் வளர்ச்சி பெறுவதற்கான முறைகளை கடைபிடிப்போம். சவாலான பணிகளை வழங்கி திறமையாக சிறப்புடன் பணியாற்றுவோரை தேர்ந்தெடுத்து அவர்களை ஊக்கப்படுத்துவோம் என்று ரானே குழுமத்தின் தலைவர் திரு.ஆர்.வெங்கடநாராயணன் (ஹ்யூமன் ரிசோர்சர்ஸ்) அவர்கள் கூறினார்.

இவ்வாண்டில் IT, ITES, இன்ஜினியரிங், மான்யுபாக்சரிங், பைனான்ஷியல், FMCG ரியல் எஸ்டேட், ஹாஸ்பிடாலிடி ஆகிய துறைகளைச் சார்ந்த சுமார் 20 தொழில்பிரிவைச் சார்ந்த 600–க்கும் மேற்பட்ட நிறுவனத்தினர் இந்த ஆராய்வில் கலந்து கொண்டனர்.